**சிறைச்சாலை திணைக்களத்தின் நீர்ப் பம்பி இயக்குநர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2026**

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவும் நீர்ப்பம்பி இயக்குநர் பதவியை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்:**

i. கல்வித் தகைமை: க.பொ.த (சா.தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ii. ஏனைய தகைமைகள்:

- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மின்சார கம்பியிணைப்பு தொடர்பான கற்கை நெறியொன்றை கற்றிருக்க வேண்டும்.
- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மின்சாரம் அல்லது டீசல் நீர்ப்பம்பி தொடர்பில் ஒரு வருட அனுபவம் இருக்க வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும் என்பதுடன் நற்பெயருக்கான களங்கம் இயைபான குற்றம் தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாக்கப்பட்டவர் இந்த பதவிக்கான நியமனத்திற்கு முழுமையாக தகுதியற்றவராவார்.
- இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.

iii. **வயது:** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் அதாவது 2026-04-20ஆம் திகதியில் 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

02. **சம்பள முறை:** 10/2025 மற்றும் 2025-03-25ஆம் திகதிய அரச நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், தொழிலாளர் / காவற்காரர் பதவிகளுக்குரித்தான மாதாந்த சம்பள அளவு PL - 2025 - ரூபா 40,000 - 10x450 - 10x490 x 10x540 - 12x590 - 61,880.00 ஆகும்.

03. **ஆட்சேர்க்கப்படும் முறை :** தொழில்சார்ந்த பரீட்சையொன்றில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் சித்தியடைய வேண்டும். தொழில்சார்ந்த பரீட்சையில் 40% வீதத்திற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மட்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

04. **ஆட்சேர்க்கப்படும் தரம் :** தரம் III

05. நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு அமைவாக அல்லாத மற்றும் சரியாக நிரப்பப்படாத முழுமையற்ற தன்மையில் காணப்படும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாக விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் இழப்பை விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

06. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘நீர்ப் பம்பி இயக்குநர் பதவிக்கு ஆட்சேர்த்தல்’’ எனக் குறிப்பிட்டு 2026-04-20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ‘‘சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சிறைச்சாலைகள் தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**எச்.எம்.என்.சீ. தனசிங்க,**
**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (பதில்),**
**சிறைச்சாலைகள் தலைமையகம், கொழும்பு 09.**
**2026-03-............**